அவர்கள் நேரடியாக பயன் பெறுகின்ற வகையிலும், தென்னையின் மதிப்புக் கூட்டுப் பொருளான தேங்காய் எண்ணெய், virgin oil, தேங்காய் powder, தேங்காய் cream, activated carbon ஆகிய பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அரசு நிறுவ வேண்டும். அதேபோல, நீராவியிலிருந்து சர்க்கரை மற்றும் வெல்லம் போன்ற மதிப்புக் கூட்டுப் பொருள்கள் தயாரிப்பதற்கு அதிக பொருட்செலவுகள் மற்றும் முதலீடுகள் ஆகின்றன. ஆகவே, அந்த ஆலையை கூட்டுறவுத் துறையின் மூலமாக நேரடியாக அமைப்பதன் மூலமாக விவசாயிகளுக்கு நேரடியாக முழு பலன் கிடைக்கும் என்பதையும், அதற்குண்டான உபகரணங்கள் மற்றும் இயந்திர கட்டமைப்பு வசதிகளை முழு மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையில், இந்தமாதிரி பல பொருட்களைத் தயார் செய்வதற்கான ஆலைகளை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

துணை மின் நிலையம்

***12770—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், கருக்கை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், கருக்கை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அந்தப் பணிகள் துவங்குவதற்குண்டான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் துவங்க இருக்கின்றன. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கான பணிகள் முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வாழ்வில் அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்திய, தமிழர்களின் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சென்ற வாரத்தில் என்னுடைய auditor அவர்களைச் சந்தித்தபோது, அவர் என்னிடம் முதலில் சொன்னது 'மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் நல்ல முறையில் ஆட்சி நடத்துகிறார் என்று எல்லோரும் சொல்கிறார்கள்' என்று குறிப்பிட்டார். அதேபோல, நேற்றுகூட ஒரு தனியார் பல்கலைக்கழக வேந்தரைச் சந்தித்தேன். அவரும் முதல் கேள்வியாக 'மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் நல்ல முறையில் ஆட்சி நடத்துகிறார் என்று எல்லோரும் சொல்கிறார்கள் அது உண்மையா?' என்று கேட்டார். அந்த அளவிற்கு மாற்றாரும், பலதரப்பட்ட மக்களும் போற்றுகின்ற, புகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புகழுக்கெல்லாம் புகழ் சேர்க்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

2018 ஜூன் 29]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றியமைத்தார்கள். அந்த வழியிலே மின் வெட்டு என்றால் என்ன என்று மக்கள் கேட்கின்ற அளவிற்கு மின் வெட்டே இல்லாமல் இந்த மாநிலத்தை நிருவகித்து வருகின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய ஆண்டிமடம் ஒன்றியம், கருக்கை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்றும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பணிகள் முடிந்துவிடும் என்றும் தெரிவித்திருக்கிறார். கேள்வி கேட்டு பதில் வருவதற்கு முன்பே பணிகளை மிக விரைவாக முடிக்கின்ற இந்த அரசையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தக் கூட்டத் தொடரிலேயே ஜெயங்கொண்டம் மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்படும் என்று அறிவிக்க இருக்கின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு advance ஆக வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார். அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம். திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், 70-வது வார்டில் உள்ள B&C Mill பகுதியில் துணை மின் நிலையம் அமைந்திருக்கிறது. அந்தத் துணை மின் நிலையம் அமைந்துள்ள கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையிலும், எப்போது வேண்டுமானலும் இடிந்துவிழும் நிலையிலும் இருக்கிறது. மேலும், மழைக் காலங்களில் மழை நீர் உள்ளே புகுந்து, தடையில்லாத, சீரான மின்சாரம் வழங்க வேண்டிய அந்தத் துணை மின் நிலையமே மின் தடைக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மேலும், அந்தத் துணை மின் நிலையம் 33/11 கே.வி. திறனுள்ள மின் நிலையமாக இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையம்

அமைந்துள்ள பகுதியைச் சுற்றிலும் புதிய குடியிருப்புகள் உருவாகிவிட்ட காரணத்தினால், அந்தப் பகுதி முழுவதும் அடிக்கடி குறைந்த மின்னழுத்தம் ஏற்படுகிறது. எனவே, அந்தத் துணை மின் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற குறைந்த மின்னழுத்தத்தைப் போக்குகின்ற வகையில், ஏற்கெனவே இருக்கின்ற 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றித்தரும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அதிகாரிகளை அனுப்பி, அதனை ஆய்வு செய்து அந்தக் கட்டடங்கள் பழுதடைந்திருந்தால், உடனடியாக பழுதுகளைச் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரு.வி.க. நகர் பகுதியில் மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது என்பதால், ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த இரண்டு ஆண்டு காலத்தில் சென்னை மாநகரில் மட்டும் 26 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றது. அதில், 400 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையங்கள் இரண்டு, 230 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையங்கள் இரண்டு, 110 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையங்கள் இரண்டு, 33/11 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையங்கள் இருபது என மொத்தம் 26 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, வர இருக்கின்ற இந்த ஆண்டிலும் 33/11 கே.வி. திறன்கொண்ட 20 துணை மின் நிலையங்கள் சென்னை மாநகரில் மட்டும் அமைக்கப்பட இருக்கின்றன. அதுபோக 20 அதிக கே.வி. திறன்கொண்ட மின்னூட்டிகளை மாற்றுவதற்குண்டான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால், மின்னழுத்தம் குறைவதற்கு வாய்ப்புகள் இல்லை.

2018 ஜூன் 29]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் புதிதாகக் குடியிருப்புகள் அதிக அளவில் கட்டப்பட்டிருப்பதாகக் கூறினார். அப்படி apartments-ஐக் கட்டுகின்றபோது, அந்த வளாகத்திற்குள் புதிதாக transformer-ஐ வைப்பதற்கு இடம் தர வேண்டும். ஆனால், அதற்குக்கூட இடம் தர மறுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அதுபோன்ற சூழ்நிலைகளில்தான் சில இடங்களில் இதுபோன்ற குறைந்த மின்னழுத்தப் பிரச்சினைகள் வரலாம். புதிய apartments-ஐ கட்டும்போது, அவர்களிடம் transformer-ஐ வைப்பதற்கு இடம் கொடுங்கள் என்று கேட்டால், அவர்கள் அடுக்குமாடி வீட்டைக் கட்டி விற்றுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். அந்த வீட்டை வாங்கும் நபர்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். இதுகுறித்து நாங்கள் CMDA-இடம் சொல்லியிருக்கின்றோம். எங்களுக்கு transformer-ஐ வைப்பதற்கு இடம் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அதுபோன்று ஒரு சில நிகழ்வுகள் இருக்கின்ற காரணத்தினால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏதாவது ஒரு சில பகுதிகளில் மின்னழுத்தம் குறைவாக இருக்கலாம். அதையும் ஆய்வு செய்து, பிற்காலத்தில் அது இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட வடகாடு ஊராட்சி ஒரு மலைப் பகுதியாகும். அங்கே பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக்கோம்பை வரை மலை சாதியினர் அதிகமாக வசித்து வருகிறார்கள். அங்கே மாட்டுபட்டிகாடு, செட்டிக்காடு போன்ற பகுதிகளில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட மலை சாதியின மக்கள் வசித்து வருகின்றனர். 2008 ஆம் ஆண்டு பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக்கோம்பை வரை வனத் துறை மூலமாகத் தார்ச் சாலை போடப்பட்டது. ஆனால், அங்கு மின்சார வசதியில்லை. சோலார் மின் விளக்கைத்தான் பயன்படுத்தி வருகின்றார்கள். அங்கே ஓர் ஆழ்குழாய்க் கிணறு வெட்டப்பட்டிருந்தாலும், குடிநீர் வசதிக்காக oil engine வைத்துதான் தண்ணீர் எடுத்து அந்த மக்கள் பருகி வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக்கோம்பை வரையில்

வசிக்கின்ற அந்த மலை சாதி மக்களுக்கு வருகின்ற காலத்தில் மின்சார வசதி ஏற்படுத்தித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தப் பகுதியில் வனத் துறையின் அனுமதி இல்லாத காரணத்தினால், அங்கே மின் கம்பங்களைக் கொண்டு செல்வதற்கு சிரமமாக இருக்கின்றது. அந்த வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், சோலார் விளக்குகளை அமைத்திருக்கின்றோம். தமிழ்நாட்டிலேயே, கிட்டத்தட்ட இதுபோன்ற மலைக் கிராமங்களில் உள்ள 4,500 தனிப்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க இயலாமல் இருக்கின்றது. அங்கெல்லாம் நாங்கள் சோலார் விளக்கு போட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நீலகிரி மாவட்டமாகட்டும், உங்கள் மாவட்டமாகட்டும், வனத் துறை மின் கம்பங்களை அமைப்பதற்குரிய அனுமதியைக் கொடுக்காத காரணத்தினால், இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. Cables அமைப்பது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. ஏனென்று சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு மடங்கிற்கு இரு மடங்காக செலவாகின்றது என்பதும் அவருக்குத் தெரியும். இப்போது அந்த இடத்தில் தார்ச் சாலை போட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார். இருந்தாலும், எதிர்காலத்தில் அதனை ஆய்வு செய்து, மின் கம்பங்களை அமைத்து, புதியதாக மின் இணைப்பு கொடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.